சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 12.06.2026 SC. 65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மித்ரன் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW 13 | | | |

-----------------------------------------------------------

<u>முதல் விசாரணை</u>

நான் கீழக்கூடலூர், சுக்காங்கல் பட்டியில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் 2ம் எதிரியை எனக்கு தெரியாது. இந்நீதிமன்றத்திற்கு வராத 1ம் எதிரி எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி விட்டதால் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.</u>**

<u>குறுக்கு விசாரணை</u>

கடந்த 01.03.2022 ம் தேதியில் சுமார் இரவு 8.30 மணியளவில் நான் எங்கள் வீட்டுக்கு எதிரே உள்ள மந்தையம்மன் கோவில் சொந்தமான காலிஇடத்திரற்கு வடக்கு பக்கமாக நின்று கொண்டிருந்தேன். எனது அம்மா மல்லிகாவும், எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் இருக்கிற பிரேமா தேவியும், எங்கள் வீட்டுக்கு முன்னால் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த சீனாவின் அண்ணன் ஸ்டாலின் கையில் அரிவாளுடன், அப்பா சிவாஜியும், ராஜாவின் வீட்டு முன்னால் நின்று கொண்டு வராண்டாவில் நின்று கொண்டிருந்த ராசாவின் குடும்பத்தாரை பார்த்து அநாகரிகமான வார்த்தைகளால் பேசி எங்கள் பேர குழந்தைகளுக்கு ஒழுங்கா வீட்டை எழுதி வைக்கமாட்டீங்களா என்று அசிங்கமாக பேசினார்கள். அதற்குள் ராசாவின் வீட்டு மாடி போசனில் குடியிருக்கும் ராசாவின் மூத்த மகன் சுரேந்திரனும், அவரது மனைவி மீனாவும், வீட்டுக்கு கீழே வந்து அவங்க எல்லாம் சேர்ந்து வீட்டுக்கு வெளியே நின்று சத்தம் போட்டு கொண்டிருந்த சிவாஜியின்

குடும்பத்தார்களை பார்த்து குடும்ப பிரச்சனையை வீட்டுக்கு வெளியே பேச வேண்டாம், வீட்டுக்குள்ளே பேசிக்கொள்ளலாம் என்று சொன்னபோது உங்களுக்கலாம் என்ன மரியாதை என்று சொல்லி ஸ்டாலின் கையில் வைத்திருந்த வீச்சரிவாளுடன் ராசாவின் வீட்டு வராண்டாவுக்குள் நுழைந்து வீட்டு வாராண்டாவில் நின்று கொண்டிருந்த அரவிந்தின் கழுத்தை வெட்ட போன போது அரவிந்த் கையால் தடுத்து அரிவாள் அரவிந்தின் இடது கையில் பட்டு மணிகட்டில் இருந்து துண்டாகி கீழே விழுந்து விட்டது. தடுக்க சென்ற அவரது அப்பா ராசாவையும் ஸ்டாலின் அரிவாளால் வெட்டி ராசாவின் இடது முழங்கைக்கு கீழ் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அப்போது அங்கிருந்த நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஸ்டாலினையும், சிவாஜியையும் சத்தம் போட்டபோது அவங்க இரண்டுபேரும் வீட்டுக்கு வெளியே வந்து சிவாஜி, ராசாவை ரோட்டில் இழுத்து போட்டு கையால் அடித்து விட்டு அங்கிருந்து சென்று விட்டனர். காயம் பட்ட இருவரையும் நானும், சுரேந்திரனும், கம்பம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்சமயம் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.06.12 17:22:28 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்